DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 23** மகாலிங்கம் |
| Father's Name | ராஜரத்தினம் |
| Village | நெகனூர் புதூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 75 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 22.04.2022

முதல் விசாரணை

நான் நெகனூர் புதூர்கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவாசய வேலை பார்த்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த அ.சா. 1 சக்திவேல் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி குப்பன் என்பவரை மற்றும் தெரியும். மற்றவர்களை தெரியாது. அ.சா.1 சக்திவேல் என்பவர் கொடுத்த புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 க்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே உள் ளபிரச்சனையை பற்றி எனக்கு தெரியாது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையானவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்பந்தமா களன்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என் வீட்டிற்கு அருகில் அ.சா.1 சத்திவேல் வீடு உள்ளதாகவும், நில பிரச்சனை சம்பந்தமாக சக்திவேலின் தந்தை ராமனுக்கும், 1ம்எதிரி குப்பனுக்கும் பிரச்சனை இருந்து வந்ததாகவும், கடந்த 2016ம் வருடம் ஆடி மாதம் ராமன் சீட்டு எடுத்து குப்பனிடம் கொடுத்ததாகவும், அதை குப்பன் கட்டாததால் ஊர் பஞ்சாயத்தாரர்கள் பணத்தை ராமனிடம் கேட்டதாகவும், மேற்படி சீட்டு பணம் தொடர்பாக 09.06.2016 ம் தேதி சாயங்காலம் ராமன், குப்பனுக்கும் தகராறு ஏற்பட்டு

ஒருவருக்கொருவர் அசிங்கமாக திட்டி கொண்டதாகவும், இதை மனதில் வைத்து எதிரி குப்பன் தனது மகன் ஞான மூர்த்தி , மருமகன் முருகன், மகள் மலர்விழி ஆகியோரை வரவழைத்து 10.06.2016 ம் தேதி தடி, மற்றும் கத்தி ஆகியவற்றுடன் சக்திவேலுவின் வீட்டிற்கு வந்து ராமன், சக்திவேல் , சங்கரி, கலைமணி, குணசுந்தரி ஆகியோரை கத்தியால் வெட்டியதாகவும், மாரியம்மாளை துடுப்பால் தாக்கியதாகவும், அலறல் சத்தம் கேட்டு நானும், அக்க பக்கம் இருந்தவர்கள் சென்று பார்த்தபோது ராமன், சக்திவேல், சங்கரி, கலைமணி, குணசுந்தரி ஆகியோர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும், காயம் பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 24** கல்யாணராமன் |
| Father's Name | பெருமாள்கவுண்டர் |
| Village | நெகனூர் புதூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 22.04.2022

முதல் விசாரணை

நான் நெகனூர் புதூர்கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவாசய வேலை பார்த்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த அ.சா. 1 சக்திவேல் , ராமன், மாரியம்மாள், செல்வி, கலைமணி ஆகியோரை தெரியும். அவர்கள் எனது தூரத்து உறவினர்கள் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு மாலை 4 லிருந்து 5 மணிக்குள் நான் செஞ்சியில் இருந்து வீட்டிற்கு சென்றபோது ராமன் வீட்டருகே சத்தம் கேட்டது. நான் சென்று பார்க்கவில்லை. ராமன், சக்திவேல், ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வெளியூர் ஆடகள் வந்து அவர்களை அடித்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் வழக்கு சம்பந்தமா க என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சென்று பார்த்த போது சக்திவேலுக்கு கட்டுபோட்டு இருந்தது.